1981 ஏப்ரல் 9]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மருத்துவ மனைகள் இல்லாத இடங்களிலே ஊராட்சி ஒன்றியங்கள் அவர்களாகவே முன்வந்து நிலத்தை இனாமாகக் கொடுத்து மருந்துகளைக் கொடுத்தால் டாக்டர்களை அரசு நியமிக்கும் என்ற விதி இருக்கிறதே, அந்த விதி அடிப்படையிலேயாவது ஊராட்சி ஒன்றியங்களில் அப்படி முன்வருகிற இடங்களிலே மருத்துவ அதிகாரிகளை அரசு செலவில் நியமிக்க அரசு முன்வந்து அப்படிப்பட்ட மருத்துவ மனைகளைத் தொடங்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த நிலைமைகளுக்கேற்ப அந்த நிலைமைகளை ஆராய்ந்து, பின்னர் முடிவெடுத்துக் கொள்கிறோம். We take decision on the merits of individual cases.

கலவை, விஷாரம் பேரூராட்சிகளிலுள்ள அரசு மருத்துவமனைகள்.

*வினா எண் 720—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதியில் உள்ள கலவை, விஷாரம் பேரூராட்சிகளில் உள்ள அரசு மருத்துவமனைகளை மக்கள் வசதிக்கு ஏற்ப விரிவுபடுத்தும் வகையில் மேலும் மருத்துவர்களை நியமிக்கும் உத்தேசம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இல்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கலவை பேரூராட்சி மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லை என்பதும், அதே சமயத்தில் விஷாரம் பேரூராட்சியில் ஆண் டாக்டர் இல்லை என்கிற காரணத்தினால், ஏழை எளிய மக்கள் அதிகம் பணம் செலவு செய்து தனிப்பட்ட டாக்டர்களிடத்திலே வைத்தியம் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால், இந்த இரண்டு இடங்களிலும் பெண் டாக்டர் ஒருவரையும், ஆண் டாக்டர் ஒருவரையும் நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நிச்சயமாக அந்த முயற்சியை அரசு எடுக்கும். கலவையைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்த அந்த மருந்தகத்தை கவர்ன்மென்ட் டிஸ்பென்சரியாக மாற்றி, இப்போது 10 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக இருக்கிறது. அங்கே

ஆண்களுக்கு 5 படுக்கைகளும், பெண்களுக்கு 5 படுக்கைகளும் இருக்கின்றன. 1—7—1970 முதல் அது அரசாங்க மருத்துவ மனையாக இயங்கிக்கொண்டு இருக்கின்றது. அதுமட்டுமல்லா மல், மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் அதை இன்னும் விரிவுபடுத்தி கிச்சன் பிளாக், மெடிக்கல் ஆபிசர்ஸ் குவாட் டர்ஸ், மெட்டர்னிட்டி அசிஸ்டன்ட் குவாட்டர்ஸ் போன்றவை கள் கட்டவேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேல்விஷாரத்தைப் பொறுத்தவரையில் அது ஒரு லோக்கல் பண்டு ஆஸ்பத்திரியாக இருந்தது. அது அரசாங்க டிஸ்பென்சரியாக 21—11—1972 முதல் மாற்றப்பட்டது.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு தலைவர் அவர் களே, மக்கள்தொகை பெருகி வரும் இந்த நாட்களில் பல ஆண்டுகளுக்கு முன்பு குறைந்த படுக்கைகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மருத்துவமனைகள் அசுத்தமான முறையில் நடந்துகொண்டு வருகின்றன. ஆகையினால் அந்த மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், கட்டட வசதியையும் ஏற்படுத்தினால், சுற்றுப்புற கிராம மக்களுக்கு, வசதி அற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் பயனடையத் தக்க வகையில் இதை விரிவுபடுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ அதிகாரி அரசுக்குத் தந்திருக்கிற பரிந்துரையை வைத்துக் கொண்டுதான் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று சொன்னேன். அந்த பதிலே நிச்சயமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர் களுக்குத் திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவர் அவர்களே, அரசாங்க டிஸ்பென்சரியிலே ஒரு நாளைக்கு 250-க்கும் மேற்பட்ட பேஷன்டுகள் வருவதால், அங்கே இருக்கின்ற ஒரே டாக்டர் அவர்களைச் சரியாக கவனிக்க முடியவில்லை. எனவே, இதுபோன்ற மருத்துவமனைகளில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கும் திட்டம் அரசுக்கு இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. நேற்றையதினம்கூட, இதுபற்றி விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லியிருக்கிறேன்.